ஆலந்தூர் – பல்லாவரத்தில் 2,000 ஆட்டோ ஓட்டுநர்களுக்கு பொங்கல் பரிசுகள் வழங்கி

# ஆலந்தூரில் நடைபெறும் திராவிட பொங்கல் விழாவில் இன்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்பு

## காஞ்சி வடக்கு மாவட்டக் கழகத்தினர் திரண்டு வந்து பங்கேற்பீர்! மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ. அன்பரசன் வேண்டுகோள் !

காஞ்சிபுரம்,ஜன.7-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் ஆலந்தூர் - பல்லாவரம் தொகுதியில் உள்ள 2,000 ஆட்டோ ஓட்டுநர்களுக்கு, இலவச சீருடை - பொங்கல் பரிசு பொருட்களை மாண்புமிகு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரில் வழங்கி, ரூ.32 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள குரோம்பேட்டை இராதா நகர் இரயில்வே சுரங்கப்பாதையை திறந்து வைத்து, அதன் பின்னர் ஆலந்தூரில் நடைபெறும் சமத்துவ பொங்கல் விழாவில் பங்கேற்கிறார் என்றும், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் திராவிட பொங்கல் விழாவை கோலாகலமாக கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளது என்றும், ஆலந்தூரில் நடைபெறும் திராவிட பொங்கல் விழாவில் மாவட்டம் முழுவதிலும் இருந்து கழகத்தினர் அனைவரும் அலைகடலென திரண்டு வந்து பங்கேற்கும் படி மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:-

தமிழர்களின் பண்பாட்டு அடையாளமான பொங்கல் திருநாளை திராவிட பொங்கல் திரு விழாவாக - சமூக நீதிக்கான கொண்டாட்டமாக உடன் பிறப்புக்கள் மிகவும் எழுச்சியுடன் கோலாகலமாக கொண்டாடிட வேண்டும் என்று, நாம் நாளும் போற்றி வணங்கும் நம்முடைய உயிரினும் மேலான அன்புத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதல் அமைச்சர் அன்பு அண்ணன் தளபதி அவர்களின் அன்புக் கட்டளையை ஏற்று,



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் திராவிடப் பொங்கல் விழாவை மிகவும் கோலாகலமாக நடத்திடும் வகையில் கோலப் போட்டி - விளையாட்டுப் போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்கிடவும், மாநகர - ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் செயலாளர்கள் கழகத்தினருக்கு பொங்கல் பரிசுகள் வழங்கிடவும், பொங்கல் திருநாளன்று கலை - இலக்கிய விழாக்களை சிறப்பாக நடத்திட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.

அந்த வகையில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் கழக இளைஞர் அணி செயலாளர் - மாண்புமிகு துணை முதல்வர் இளைய தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திராவிட பொங்கல் விழாவை யொட்டி, நாளை ஜனவரி 7-ஆம் தேதி மாலை நடைபெறும் 3 பொங்கல் விழாக்களில் பங்கேற்கிறார்.

நாளை மாலை 4.00 மணியளவில் புனித தோமையர் மலை, மான்போர்ட் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி கூட்ட அரங்கில், ஆலந்தூர் தொகுதியில் உள்ள 1000 ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சீருடை மற்றும் பொங்கல் பரிசு பொருட்களை துணை முதல்வர் அவர்கள் வழங்குகிறார்.

பிறகு அவர் குரோம்பேட்டைக்கு சென்று, குரோம்பேட்டை இரயில் நிலையம் அருகில் ரூ.32 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள குரோம்பேட்டை ராதாநகர் இரயில்வே சுரங்கப்பாதையை திறந்து வைக்கிறார்.

அடுத்து அவர் பல்லாவரம் சந்தை ரோட்டில் நடைபெறும் பொங்கல் விழாவில், பங்கேற்று பல்லாவரம் தொகுதியில் உள்ள 1000 ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சீருடை மற்றும் பொங்கல் பரிசு பொருட்களை வழங்கினார்.

அதன் பின்னர் ஆலந்தூர் கத்திப்பாரா மேம்பாலம் பெரியார் சிலை அருகில் அமைந்துள்ள திடலில் மாவட்ட தி.மு.க. சார்பில் நடைபெறும் சமத்துவ பொங்கல் விழாவில் துணை முதல்வர் அவர்கள் பொது மக்களுடன் இணைந்து மகிழ்ச்சியுடன் கொண்டாட வருகை தருகிறார்.

ஆலந்தூரில் நடைபெறும் திராவிட சமத்துவ பொங்கல் விழாவில் மாவட்டம் முழுவதிலும் இருந்து கழகத்தினர் அனைவரும் பெருந்திரளாக திரண்டு வந்து பங்கேற்று சிறப்பிக்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.



திராவிட பொங்கல் திருநாளை முன்னிட்டு திருவள்ளூர் நகராட்சிக்கு உட்பட்ட 500 தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி நகர் மன்ற தலைவர் உதயமலர் பாண்டியன் தலைமையில் நடைபெற்றது. இதில் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு பொங்கல் பரிசு மற்றும் நலத்திட்ட வழங்கி தூய்மை பணியாளர்களுக்கு உணவு பரிமாறி உணவு அருந்தினார். உடன் மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன், நகர மன்ற துணை தலைவர் சி.சு.ரவிச்சந்திரன், நகராட்சி ஆணையர் தாமோந்திரன், மாவட்ட அவைத் தலைவர் கே.திராவிடபக்தன், தொகுதி பார்வையாளர் மாஸ்டர் சேகர், ஹரி கிருஷ்ணன், டி.மோதிலால், பிரகாஷ் ஞான ஒளி, முன்னாள் நகர மன்ற தலைவர் பொன்.பாண்டியன் உள்பட கழக நிர்வாகிகள் வார்டு கவுன்சிலர்கள் தூய்மை பணியாளர்கள் உள்ளனர்.

வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதியில் 58 ஆக்கிரமிப்பு வீடுகளுக்கு

# மாற்றுக் குடியிருப்புகள் வழங்குவது குறித்து ஆய்வுக் கூட்டம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் நடைபெற்றது!

சென்னை, ஜன.7-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி நேற்று (05.01.2026) இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு அவர்கள், திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு-71க்குட்பட்ட மேட்டுப்பாளையம் விளையாட்டுத் திடலினை மேம்படுத்துவது குறித்து நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, அலுவலர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் தலைமையில், வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள வில்லிவாக்கம், அன்னை சத்யா நகர் அருகில் வசிக்கும் 58 ஆக்கிரமிப்பு வீடுகளுக்கு மாற்றுக் குடியிருப்புகள் வழங்குவது குறித்து வி.க. நகர் மண்டல அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்ற அனைத்து துறை அலுவலர்களுடனான கூட்டத்தில், அலுவலர்களுக்கு உரிய ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகளை வழங்கினார்.

பின்னர், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் சேத்துப்பட்டு, மீனாம்மாள் சிவராஜ் நகர் (எம்.எஸ்.நகர்) திட்டப்பகுதியில் நடைபெற்று வரும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்பு கட்டடப் பணியின் இறுதிக் கட்டப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

கண்ணந்தக்குடி கீழையூரில்

# மொழிப்போர்த் தளபதி எல்.கணேசன் உடல் நல்லடக்கம்!

## கழகத் தலைவர் – பொருளாளர் – முதன்மைச் செயலாளர் நேரில் அஞ்சலி!

தஞ்சாவூர், ஜன.7-

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு ஒன்றியம், கண்ணந்தக்குடி கீழையூர் என்ற குக்கிராமத்தில் பிறந்து, இந்தி எதிர்ப்பு போராட்டங்களில் பங்கெடுத்து, பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களோடு தோளோடு தோள் நின்று மாணவ பருவமுதல் இறக்கும் தருவாய் வரை இந்தியை தமிழ்நாட்டில் திணிக்க கடும் எதிர்ப்பு தெரிவித்த மொழிப்போர் தளபதி எல்.ஜி (எ) எல். கணேசன் (92) வயது மூப்பின் காரணமாக 04.01.2025 அன்று காலை 05.30 மணிக்கு மறைவெய்தினார்.

அண்ணாரின் மறைவுச் செய்தியறிந்த கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தஞ்சை பாலாஜி நகரில் உள்ள எல்.கணேசன் வீட்டிற்கு நேரில் வந்து மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். பின்னர் அவது மனைவி க.கமலா, மகன்கள் எல்.ஜி.அண்ணா, மருத்துவர் குட்டி (எ) எல்.ஜி.கோவிந்தநாதன், மகள் மருத்துவர் எல்.ஜி.மாதவி உள்ளிட்ட குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். எல்.ஜி.அண்ணா தஞ்சை மத்திய மாவட்டப் பொருளாளர்ராக பொறுப்பு வகித்து வருகிறார்.

அதனைத் தொடர்ந்து கழக பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி, கழக முதன்மைச் செயலாளர், அமைச்சர் கே.என்.நேரு, அமைச்சர்கள் எஸ்.ரெகுபதி முனைவர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, முனைவர் கோவி. செழியன், , சிவ.வீ.மெய்யநாதன், டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜன், கழக சட்டத்திட்ட திருத்தக் குழு தலைவர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி.,

மாவட்டக் கழகச் செயலாளர்கள் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, தி.பழநிவேல், பூண்டி கே.கலைவாணன், என்.கௌதமன், கே.கே. செல்லபாண்டியன், ச.முரசொலி எம்.பி,

சட்டமன்ற உறுப்பினர்கள் டி.கே.ஜி.நீலமேகம், கா.அண்ணாதுரை, என். அசோக்குமார், மாநகரச் செயலாளர்கள் சு.ப.தமிழழகன், மேயர் சண்.இராமநாதன், மாநில நிர்வாகி கள் சி.இறைவன், து.செல்வம், எம்.இராமசந்திரன், கே.டி. மகேஷ்கிருஷ்ணசாமி, எஸ். ஜித்து, தாட்கோ தலைவர் ந.இளையராஜா,

கழக கொள்கைப் பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் கல்யாணம், சூர்யா வெற்றி கொண்டான், கவிச்சுடர் கவிதைப்பித்தன், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளை சார்ந்த தலைவர்கள், நிர்வாகிகள், அரசு அதிகாரிகள் அஞ்சலி செலுத்தினர்.

முத்தமிழறிஞர் அவர்களின் செயலாளர் கி.இராஜமாணிக்கம் (ஐ.ஏ.எஸ். ஓய்வு) அவர்கள் குடும்பத்தினருடன் சென்று அன்னாரின் உடலுக்கு நேரில் அஞ்சலி செலுத்தினார்.

05.01.2025 அன்று எல். கணேசன் அவர்களின் உடல் தஞ்சையிலிருந்து அவரது சொந்த ஊரான கண்ணந்தக்குடி கீழையூருக்கு கொண்டு வழி நெடுகிலும், கழக தோழர்களும், பொது மக்களும், சாலை ஓரங்களில் நின்று கண்ணீர் அஞ்சலி செலுத்தினர். பின் அவரது சொந்த உரில் உள்ள அனைத்து தெருக்களுக்கும் அன்னாரது உடல் எடுத்து செல்லப்பட்டு பொதுமக்கள் அஞ்சலி செலுத்தினர்.

மதியம் 1.30 மணியளவில் அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து மொழிப்போர் தளபதி எல்.கணேசன் அவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் அங்கு கூடியிருந்து கழக நிர்வாகிகள், தொண்டர்கள், தோழமைக் கட்சி நிர்வாகிகள், மாற்று கட்சியினர், பொதுமக்கள் மௌன அஞ்சலி செலுத்தினர்.

அரசு ஊழியர்களின் 22 ஆண்டு கால கோரிக்கை நிறைவேற்றம்!

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு மனமார்ந்த நன்றி!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேட்டி!

திருச்சி, ஜன. 7-

முதலமைச்சர் அவர்கள் கடைசி மாத ஊதியத்தில் 50% தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதிய திட்டம்(TAPS) என்ற பெயரில் ஓய்வூதியத் திட்டத்தை அறிவித்தார்.

அரசு ஊழியர்களின் கடைசி மாத ஊதியத்தில் 50% உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியமாக வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்ற நிர்வாகிகள் மற்றும் ஜாக்டோ - ஜியோ நிர்வாகிகள் பால்பாண்டி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பொ.ரவிச்சந்திரன், மாநில தலைவர் தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றம் பொன்னுச்சாமி, தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்ற மாவட்டத் தலைவர் சைவராசு, திருச்சி மாவட்ட மாநகரச் செயலாளர் ஆசிரியர் மன்றம் சொத்து பாதுகாப்பு குழு உறுப்பினர் ரவிச்சந்திரன் மற்றும் பலர் அமைச்சர் அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

திருச்சி விமான நிலையத்தில் முனைவர் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பேட்டி,



நீண்ட நெடிய நாள் கோரிக்கை ஏறத்தாழ 22 ஆண்டு கால அரசு ஊழியர்களின் கோரிக்கையை தமிழ்நாடு முதலமைச்சர் நேற்று நிறைவேற்றியுள்ளார்.

தொடர்ந்து ஒவ்வொரு சங்கத்தையும் அழைத்து பேச்சுவார்த்தை நடத்தி அதில் உரிய தீர்வு கண்டு பின்பு முதல்வரிடம் எடுத்துரைத்தோம். அந்தக் குழுவில் எனக்கும் ஓர் இடம் கொடுத்த முதல்வர் அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

அதன் பிறகு தற்போது முதல்வர் இந்த ஓய்வூதிய திட்டம் தொடர்பாக அறிவிப்பை வெளியிட்டுள்ளது. மிகவும் மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

முதல்வர் அறிவித்த இந்த ஓய்வூதிய திட்டத்திற்கு தமிழ்நாடு பள்ளி கல்வித் துறை அமைச்சர் என்ற முறையில் எனது சார்பாகவும் ஆசிரியர்கள் அரசு ஊழியர்கள் சார்பாகவும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

22 ஆண்டுகளுக்கு பிறகு இந்த அறிவிப்பை நாங்கள் அறிவித்துள்ளோம்.

இது குறித்து கேள்வி கேட்க யாருக்கும் தகுதி இல்லை என்றார்.

ஒட்டுமொத்தமாக எங்களது பள்ளிக்கல்வித்துறை சார்ந்த ஆசிரிய பெருமக்கள் சார்பாகவும் அரசு ஊழியர் சார்பாகவும் முதல்வர் அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம் என்றார்.



திருச்சி மாவட்டம் திருவெறும்பூர் தொகுதியில வாக்காளர் சேர்ப்பு முகாமினை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆய்வு மேற்கொண்டார்.

# வேதாரண்யம் கிழக்கு ஒன்றியம் - காதர் மீரான் மறைவு!

நாகை, ஜன. 7 -

நாகை மாவட்டம் வேதாரண்யம் கிழக்கு ஒன்றியம் கோடியக்காட்டைச் சேர்ந்த தொண்டரணி துணை அமைப்பாளர், கழக பாகநிலை முகவர்(பி.எஸ்.ஏ.2) அ.காதர்மீரான் (வயது 40) இவர் கடந்த 4ம் தேதி நடந்த வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்த முகாமில் பணியாற்றிக் கொண்டிருந்தார் அப்போது நெஞ்சு வலி ஏற்பட்டுள்ளது.

உடனடியாக சிகிச்சைக்காக வேதாரண்யம் அரசு மருத்துவமனை சேர்க்கப்பட்டு அங்கு இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். மறைந்த ஏ காதர் மீரானுக்கு மனைவி தவ்பிக்கா மகள்கள் ஆசிலா, அமீரா ஆகியோர் உள்ளனர். கோடியகாட்டில் அவரது இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த காதல் மீரான் உடலுக்கு கழகத்தினர் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்.



நீலகிரி மாவட்டம் உதகை அரசு கலைக்கல்லூரியில், மாணவ, மாணவியர்களின் திறன் வளர்ச்சி மற்றும் டிஜிட்டல் முன்னேற்றத்திற்காக “உலகம் உங்கள் கையில்” எனும் திட்டத்தின் கீழ், அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன் 1,994 மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகளை நேற்று முன்தினம் (05.01.2026) வழங்கினார். உடன் உதகை சட்டமன்ற உறுப்பினர் ஆர்.கணேஷ், மகளிர் திட்ட இயக்குநர் மரு.ஜெயராமன், உதகை நகர்மன்ற தலைவர் திருமதி வாணீஸ்வரி, நகர மன்ற துணைத் தலைவர் ரவிக்குமார், நகர மன்ற உறுப்பினர் விசாலாட்சி,பொதுக்குழு உறுப்பினர் மோகன் குமார்,உதகை தெற்கு(மேற்கு) ஒன்றிய;r செயலாளர் ச.ஜெகதீஸ்வரன்,மாவட்ட மாணவரணி அமைப்பாளர் விவேகானந்தன், மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் விவேக் பொன்தோஸ், செந்தில்குமார்,உட்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.



தருமபுரி மாவட்டம்,பாலக்கோடு பஞ்சப்பள்ளி கிராமம் சின்னாறு நீர்த்தேக்கத்திலிருந்து விவசாய நில பாசனத்திற்காக மாவட்ட ஆட்சித்தலைவர் ரெ.சதீஸ்,மற்றும் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி ஆகியோர் தண்ணீரை திறந்து வைத்தனர்.இதன் மூலம் 4500 ஏக்கர் நிலம் பாசனவசதி பெறும்.நிகழ்வில் பி.கே.அன்பழகன்,எம்வீடி.கோபால்,முனியப்பன்,முருகன்,மூத்த வழக்கறிஞர்.டி.சந்திரசேகர்,சூடப்பட்டி. சுப்பிரமணி,உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.